குமாரவயலூர்

# திருமுருகன் பாமாலை



இயற்றியவர் :

குற்றாலம் வள்ளிநாயகம்

குமாரவயலூர்

# திருமுருகன் பாமாலை

## காப்பு

ஞால இயக்கத்து நேர்மகா சக்தியின்
பாலன் அருள்வேண்டி பாலகன் நான்பாட
மூல முதல்வன் முடிவில்லா நாயகன்
வேழ முகத்தோனே காப்பு!

## சக்தி துதி

தொடுமுன்னே திறக்கின்ற மணிக்கதவே
தொழுமுன்னே அருள்கின்ற எழில்வடிவே
அழுமுன்னே அணைக்கின்ற மலர்க்கரமே
அன்னை அகிலாண்ட நாயகியே
போற்றி ! போற்றி!

வெண்ணீ ரணிந்த நெற்றி
விழிகளில் கருணை வெள்ளம்
பன்னீர் மணக்கும் மார்பு
பன்னிரு தோளின் வன்மை

முன்னென் பிறப்பை நீக்கி
முக்தியின் சுகத்தைக் காட்டும்
பொன்னின் திருப்பா தங்கள்
புன்னகை அருளும் வரங்கள்!

எண்ணில் பின்னம் போல
எழுத்தில் தலைவிதி யாக
மண்ணில் பிறந்த தாலே
மயக்கிப் படரும் பாவம்

எண்ணம் கந்தன் பாலே
இருத்தத் தொடரா தொழியும்
கண்ணின் மணியே வேலா
கவிதை சிறக்க அருள்வாய்!

நன்மை மறந்த துண்டு
தீமை புரிந்த துண்டு
உண்மை தன்னை ஒதுக்கி

பொய்யும் பகர்ந்த துண்டு

கண்மை விழியார் மையல்
களத்தே வீழ்ந்த துண்டு
எண்ணில் குற்றம் புரிந்த

என்னை மன்னித் தருளும்

உன்னை மறந்த பாவம்
ஒன்றே உயிரை வாட்ட
கண்ணில் நீர்மிகப் பெருக்கிக்

கருத்தின் சீர்நான் குலைந்தேன்

உன்னை நினைக்க வைத்து
உன்பேர் பாடப் பணித்த
கந்தா கடம்பா போற்றி!
கதிர்வேல் முருகா போற்றி!

பொன்னியின் கரையோரம் பூத்த வயலூரில்
பொன்னொளிர் ஜோதியாய் நின்றமுருகா!
பொருநையின் கரையோரப் புதுத்தமிழ்
மலர்கொண்டு
பூஜிக்க நானாசை கொண்டேனடா!

அன்னையின் அன்பிலும் அறியாமை உட்புக
அதனால்சிறு துயரங்கள் நேரும்!
உன்னருள் சாகரம் உட்புகுந்தாட்கொண்டால்
உண்டாகு மின்பத்திற் கெல்லையுண்டோ?

அறியாத பெற்றோர்க்கு மகனாகப் பிறந்துபின்
அழிகின்ற உடற்கூட்டை வளர்த்து
புரியாத கல்வியை பொருள்கொடுத்தே கற்று
பொருளீட்டத் தொழிலொன்று செய்து

உரிமையில் திருமணங் கொண்டதன் விளைவாக
உறவோடு பந்தங்கள் தழைத்து
சிறுமையில் மூழ்கியே செம்மையை மறந்தவன்
தெளியவொரு வழிசொல்லு வாய்!

இரவொன்று பேசுவார் பகலொன்று செய்குவார்
இரண்டுக்கும் தொடர்பேகு மின்றி
உறவென்று வகைசொல்லி உள்ளத்தில்
பகையெண்ணி
உதட்டளவில் உரையாடு வார்

கரவொன்று மனங்கொள்ள கனிகின்ற நெருப்பினை
கவனமாய் நகையில் மறைப்பார்
அரவோடு வாழிவினும் அன்னவர் நண்பராய்
அண்டாது காக்கமுருகா!

இளமையில் எதிர்பார்ப்பு முதுமையில் ஏமாற்றம்
என்னதான் தந்ததிப் பிறப்பு?
வளமையில் வாழ்ந்தவன் வறுமையில் தாழ்ந்தவன்
அனைவருக்கும் பொதுவன்றோ இறப்பு!

நிலைமையின் மாற்றங்கள் நெடிதான வாழ்க்கையில்
நேர்ந்தவை எல்லாமே வெறுப்பு!
குலைவாழைத் தரைதொடும் வயலூரைப் பதியாகக்
கொண்டவன் தாளன்றோ சிறப்பு!

பன்னிரு விழிகாணும் பாக்கியம் என்றோடி
என்னிரு விழிதேடுதே இறைவா உனை நாடுதே
கண்களின் இமையோரம் கண்ணீர் பெருகுதே
கந்தா உனைக்காணும் திருநாள் என்று?

தென்றல் தாலாட்டும் தீங்கனி மரமாடும்
சிறகை விரித்தந்த புள்ளினம் கவிபாடும்
வண்டல் வயல்சூழ்ந்த் வயலூரின் ஆண்டவா
வாவா எனைக்காணவா வாவா எனைக்காக்கவா?

எதிர்கொள்ள வேண்டுவன எதுவந்த போதிலும்

இன்னருள் துணைநிற்க வேண்டும்

உதிர்கின்ற உடலுக்குள் உயிரூடிநிற்கின்ற

தத்துவப் பொருள்சொல்ல வேண்டும்

புதிர்கொண்ட வாழ்விலே பொறுக்காமல் நான்பட்ட

புண்ணெல்லாம் நீயாற்ற வேண்டும்

கதிர்கொண்ட வயலூரில் பதிகொண்ட கந்தாநின்

கால்கள்கண் முன்தோன்ற வேண்டும்!

மரணபயம் வந்தபின் வாழ்வில் சுகம் கூடுமோ?

மனிதனுடல் மாயையதன் போர்வையே

கரணமிடும் வானரம் போலமனம் தாவிடும்

காரணங்கள் கூடதினம் மாறிடும்

உறவுகளும் பாரமே உணர்வுகளும் துன்பமே

உன்னைக்காக்க ஒருவரிங்கு இல்லையே

சரவணனின் பாதங்கள் தவிரப்புணை ஏதடா

சாகரத்தை கடந்துகரை சேரவே!

வேகத்தில் நடக்கின்ற போது
விளைவுகளைப் பார்க்கவில்லை அன்று
ஞானக்கோல் போட்டவொரு சூடு
நிதானத்தைக் காட்டுதடா இன்று!

பாகத்தில் பார்வதியைக் கொண்டோன்
பாலகனே வயலூரில் நின்றோய்
பார்த்தாயா கேட்டாயா பாட்டை
பாவிக்கு முக்திவர முண்டோ?

பறிக்கின்ற கனியெல்லாம் பசிதீர்க்கு மெனநம்பி
பயணங்கள் தொடரு மொருவன்
விரிக்கின்ற வலைகளை கூடார மெனவெண்ணி
இளைப்பாற வந்த முடன்

குறிக்கின்ற திட்டங்கள் ஆயுதம் துணையின்றி
கொடுங்களம் புகுந்த சிறுவன்
தரிக்கின்ற வழியுண்டோ தவறியிப் பூமியில்
சண்முகா அடைக்கலம் தா!

வெண்ணீ ரபிஷேகக் கோலத்தை காண்கையில்
விழியிமைப் பொருந்தாதப்பா
பன்னீர் மணக்கின்ற பவளவாய்ப் புன்னகை
பதித்தகண் மீளாதப்பா!

கண்ணீர் கங்கைஉன் கால்களை நனைத்துமேன்
கல்லாகி நின்றா யப்பா
என்னுயிர்க் கவிதையை செவிமடுத்த பின்புமேன்
எழுந்தருளத் தயக்க மப்பா!

சிரிக்கின்ற பொழுதெல்லாம் சிந்திக்க மறந்துன்னை
தெளிவில்லாப் பாதை நடந்தேன்
அரிக்கின்ற துயரங்கள் அடுக்கடுக்கானபின்
அண்டியுன் வாசல் கிடந்தேன்

வரித்தாலும் தவிர்த்தாலும் வாழ்விக்கும் தெய்வம்நீ
வயலூரில் இருப்பதால் தான்
திறமேது மில்லாத சிறுவனும் உனைப்பாடி
தேடுவா னுறுதி பெற்றேன்!

மோகத்தின் வழி நடந்த போது

மோகனமே உன்நினைவைத் துறந்தேன்

ஊகத்தில் அறிவுதூங்கும் போது

உண்மைக்கு மனக்கதவம் அறைந்தேன்

நோகின்ற வாழ்வினிலே வாடி

நொறுங்குமந்த இதயவலி யோடு

சோகத்தில் நான்களைத்த நேரம்

சுடர்த்தேனாய் நீவந்தாய் பிழைத்தேன்!

வலியெல்லாம் சுகமானது முருகா - உன்

வாசல் வந்து விழுந்தபின்னே குமரா!

பலியானது பயமெல்லாம் குமரா - உன்

பாதம்பற்றி அழுதபின்னே முருகா!

சுழியானது அழிந்ததடா கந்தா - ஓம்

முருகா எனச்சொன்னதனால் வேலா!

வழியானது தெரியுதடா வேலா - சக்தி

வடிவேலதன் மகிமையடா கந்தா!

செந்தூர் சென்றபலன் திருத்தணியை தொட்டவரன்
திருப்பரங் குன்றிலுனைத் தரிசித்து
வந்தே பழனிப்பதிப் படியேறி, சுவாமிமலை
வாசன் திருமுருகன் அருள்பெற்றுக்

கந்தப் பழமுதிரும் கவின்சோலைக் காட்சியும்
கண்டேன் வயலூரின் தரிசனத்தில்!
சந்தப் பாவெடுத்து சாற்றிய தமிழ்மாலை
சன்னதியில் மணக்கட்டும் முருகா!

செந்தில் அலையாடும் திருத்தணிப் புகழ்பாடும்
திருப்பரங் குன்றத்தில் மயிலாடுமே
கந்தன் பேர்சொல்லக் காலம் இனிதாகும்
கவலைகள் பறந்தோடிக் களிப்பாகுமே!

பந்தம் தவிர்க்கின்ற பாலன் திருமுருகன்
பழனி மலைமீது கோவில் கொண்டான்
சொந்தம் அவன்தவிர யாரும் இலையென்றே
சுவாமி மலையேற சுகங்கூடுமே!

சந்தப் பழமுதிரும் சங்கம்வளர் சோலை
சந்நிதி தமிழ்முதல்வன் சந்நிதியே
சிந்து கவிபாடி சேவடி நினைந்தாட
சேரும் நன்மைகள் நமக்காகவே!

எந்தத் துயரங்கள் எவ்வழி வந்தாலும்
கந்தன் திருக்கையின் வேல்காக்குமே
வந்து வணங்குகின்ற பக்தனின் கலிதீர
வயலூர் பாதங்கள் வழிகாட்டுமே!

குமார வயலூர்

# திருமுருகன் பாமாலை

கந்த சஷ்டி வெளியீடு

நவம்பர், 2015



பக்தியுடன் வழங்கும்

**குற்றாலம் வள்ளிநாயகம்**

கவிஞர் மதுபாலிகா

கை பேசி-9445000699

Classic Prints 25513522

குமார வயலூர்

# திருமுருகன் பாமாலை



இயற்றியவர்

**குற்றாலம் வள்ளிநாயகம்**